# The Secret of George Mueller Prayer Life.

(an excerpt from an article from the website GeorgeMueller.org)

Muller's Secret of Having 50,000 Prayers Answered Muller is known to have had 50,000 prayers answered to big and little prayers during his 93 years of life. According to an article in The Times, Muller received approximately 1.5 million pounds (equalling 2.6 million dollars) through faithful prayer and established orphanages in five locations. Also, he published 64,000 copies of the Bible, 85,000 copies of the New Testament and 29 million copies of religious books. In addition to that, he supported 150 missionaries such as Hudson Taylor. What are his secrets of having about 50,000 prayers answered without doing business or raising funds from government or social service organizations?

**First, he did not pray for things to exalt or glorify himself.** The only purpose of his life was to manifest the glory of God. Thus, he hoped for people to witness how his prayers were answered. He wanted them to acknowledge God's existence, help, and love and believe in Him.

**Second, he did not rely on any plausible condition or seek the Testimony or help of man.** Any good situation can be overturned and people can always fall. (Psalms 146:3) George Muller knew that the only One who can help mankind faithfully is God. Thus, he was able to only look onto Him and proceed in faith.

**Third, Muller discerned whether his prayers were pleasing to the Lord.** Whether anything was difficult, burdensome, wearisome, or impossible was not important to him. He took steps to do things that seemed difficult and destructive. Because it is God, not Muller himself, who fulfils His work (Philippians 4:13), he believed that "God will surely accomplish what pleases Him" and consequently experienced the great work of God. George Muller did not start his ministry or establish orphanages in order to glorify his name or to fulfil his desires. He only hoped to witness to the world that the unbound power of God is granted to those who believe His Words and follow Him. As he did the work of God that pleased Him, he only sought after the Lord and experienced His power.

# <u>ஜார்ஜ் முல்லரின் ஜெப வாழ்க்கையின் இரகசியம்</u>

முல்லரின் 50,000 ஜெபங்களுக்கு பதில் கிடைத்த இரகசியம். முல்லர் தனது 93 ஆண்டுகால வாழ்க்கை பயணத்தில், பெரிய மற்றும் சிறிதும்மான 50,000 ஜெபங்களுக்கு பதிலை பெற்றுக்கொண்டதாக அறியப்படுகிறார். ஒரு கட்டுரையின்படி, முல்லரின் விசுவாமான ஜெபத்தின் மூலம் 1.5 மில்லியன் பவுண்டுகள் பெற்றுக்கொண்டு, அந்த பணத்தில் ஐந்து இடங்களில், அனாதை இல்லங்களை நிறுவினார் என்று கூறப்படுகிறது. (2.6 மில்லியன் டாலர்களுக்கு சமம்). மேலும் வேதாகமத்தின் 64,000 பிரதிகளை அவர் வெளியிட்டார், புதிய ஏற்பாட்டில் 85,000 பிரதிகள் மற்றும் மத புத்தகங்களில் 29 மில்லியன் பிரதிகளை வெளியிட்டார். அதுமட்டுமின்றி, ஹட்சன் டெய்லர் போன்ற 150 மிஷனரிகளுக்கு உதவிச் செய்தார். வியாபாரம் செய்யாமலும், அரசாங்கத்தில் நன்கொடை வாங்காமலும் அல்லது சமூக சேவை நிறுவனங்களிடமிருந்து நிதி திரட்டாமலோ, சுமார் 50,000 ஜெபங்களுக்கப் பதில் கிடைத்ததின் இரகசியம் என்ன?

**<u>முதலாவதாக, தன்னை உயர்த்திக் கொள்ளவோ அல்லது மகிமைப்படுத்துவதற்காகவோ அவர் ஜெபம் செய்யவில்லை.</u>** கடவுளின் மகிமையை வெளிப்படுத்துவதே, அவரது வாழ்க்கையின் ஒரே நோக்கமாக இருந்தது. இதன்மூலம், அவருடைய ஜெபங்கள் எவ்வாறு பதிலளிக்கப்பட்டன என்பதை மக்கள் நேரில் பார்ப்பார்கள் என்று அவர் நம்பினார். தேவன் ஜீவிக்கிறார் என்பதையும், அவருடைய உதவி, அன்பு போன்ற காரியங்களில் அவரை நம்ப வேண்டும் என்பதையும் அவர் விரும்பினார்.

**<u>இரண்டாவதாக, அவர் எந்தவொரு நம்பத்தகுந்த நிபந்தனையையும் நம்பவில்லை அல்லது மனிதனின் சாட்சியத்தையோ உதவியையோ நாடவில்லை.</u>** எந்த ஒரு நல்ல சூழ்நிலையும் தலைகீழாக மாறமுடியும், மேலும் மக்களும் வீழ்ந்துபோக முடியும். (சங்கீதம் 146:3). மனித குலத்திற்கு உண்மையாக உதவக்கூடிய ஒரே ஒருவர் கடவுள் மட்டுமே என்பதை ஜார்ஜ் முல்லர் அறிந்திருந்தார். ஆகவே, அவரை மட்டுமே நோக்கிப் பார்த்து, அவர் விசுவாசத்தை தொடர்ந்தார்.

**<u>மூன்றாவதாக, முல்லர் தனது ஜெபங்கள் கடவுளுக்குப் பிரியமானதாக இருக்கிறதா என்பதை பகுத்தறிந்தார்.</u>** அவருக்கு கடினமானது, பாரமானது அல்லது சாத்தியமில்லாதது எதுவும் அவரைப் பொருத்தவரை முக்கியமில்லை. கடினமானது மற்றும் அழிவுகரமானதாகவும் தோன்றிய காரியங்களைச் செய்வதற்கு அவர் முயற்ச்சி எடுத்தார். ஏனென்றால், கடவுள் மட்டுமே வேலையைச் செய்து முடிப்பவர், முல்லர் அல்ல என்பதை அறிந்திருந்ததினால், 'கடவுள் தனக்கு விருப்பமானதை நிச்சயமாக நிறைவேற்றுவார்' என்று அவர் விசுவாசித்தார். அதன் விளைவாக கடவுளின் மகத்தான வேலையை அனுபவித்தார். (பிலிப்பியர் 4:13). ஜார்ஜ் முல்லர் தனது பெயரை மகிமைப்படுத்துவதற்காகவோ, அல்லது அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவோ தனது ஊழியத்தையும், அனாதை இல்லங்களையும் ஸ்தாபிக்கவில்லை. அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து, அவரைப் பின்பற்றுபவர்களுக்கு, கடவுளின் எல்லையற்ற வல்லமை வழங்கப்படுகிறது என்பதை, உலகத்திற்கு சாட்சி கொடுப்பதை மட்டுமே அவர் விரும்பினார். அவர் தனக்குப் பிரியமான தேவனுடைய வேலையைச் செய்து, கர்த்தரை மட்டுமே நாடி, அவருடைய வல்லமையை அனுபவித்தார்.